பக்கங்கள் 16

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 29 ஞாயிற்றுக்கிழமை 14.01.2024 அதிர்வு 167

## யாழ். காரைநகரில் நாளை நல்லிணக்க பொங்கல் விழா

### நீதி அமைச்சர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நடைபெறவுள்ள தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா வில் பங்கேற்க நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாணம் 04





# கிளிநொச்சி கால்வாய்க்குள் இருந்து இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு

### மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் துயரம்

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி – வட்டக்கச்சி பிரதான வீதியில் கோவிந்தன் கடை சந்திப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

அந்த வீதியிலுள்ள நீர்ப்பாசன கால்வாய்க்குள் இன்று காலை இரண்டு தலைக்கவசங்களும், மோட்டார் சைக் கிள் ஒன்றும் கிடப்பதை அவதானித்த பொதுமக்கள் கிளிநொச்சிப் பொலி ஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்குப் பிரவேசித்த பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் நீர்ப்பாசன கால்வாயிலிருந்து இரண்டு இளைஞர்களின் சடலங்களையும் மீட்ட னர்.

கிளிநொச்சி, கல்மடு பகுதியை சேர்ந்த 20 வயதுடைய தயாளன் தனு சன், அழகாபுரி பகுதியைச் சேர்ந்த 04



# தமிழர்கள் நிம்மதியாக வாழ ராஜபக்ஷக்களே காரணமாம்

### இப்படிச் சொல்கின்றார் மஹிந்தர்

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ராஜபக்ஷக்களே காரணம் என்று முன்னாள் ஜனாதி பதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித் தார்.

சமகால அரசியல் நிலை வரம் தொடர்பில் தென்னி லங்கை ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

“பிரபாகரன் தலைமையி லான தமிழீழ விடுதலைப்புலி களின் பயங்கரவாதப் போராட் டத்தால் இந்த நாட்டில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டார்கள். 04





# பிரமண்டு வித்தியாலயத்தில் வகுப்பறை உடைத்து திருட்டு!

## சி.சி.ரி.வி. கமராவில் சிக்கிய சிறுவன்

## வவுனியா பொலிஸ் தீவிர விசாரணை

(கி.வசந்தரூபன்)

வவுனியா, தாண்டிக்குளம், பிரமண்டு வித்தியாலயத்தில் திறன் வகுப்பறை உடைத்து அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டுள்ளன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பாடசாலையில் திறன் வகுப்பறையின் பூட்டு உடைக்கப்பட்டு பல இலட்சம் பெறுமதியான தொலைக் காட்சி களவாடப்பட்டமை தொடர்பில் நேற்று கண்டறியப்பட்ட நிலையில், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து நேற்று மாலை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை மேற்கொண்டிருந்தனர்.



இந்தச் சம்பவம் தொடர்பில் பாட சாலைக்கு இன்று காலை விரைந்த வவுனியா பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், பாடசாலைக்கு அருகேயுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி. காணொளிகளையும் பரிசோ தனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது, கடந்த வெள்ளிக் கிழமை மதியம் 3.29 மணியளவில் 15 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் தொலைக்காட்சியைத் தூக்கிச் செல்வது சி.சி.ரி.வியில் பதிவாகியுள்ளது. சி.சி. ரி.வி. காட்சியின் உதவியுடன் அந்தச் சிறுவனைக் கண்டுபிடிப்பதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் முன் னெடுத்துள்ளனர்.

பாடசாலை அதிபர் மற்றும் பாட சாலை பாதுகாவலர்கள் மேலதிக விசாரணைக்காகப் பொலிஸ் நிலை யத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

# மேலும் 771 பேர் கைது!



நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தி யாலங்களில் 771 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 23 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட் களுக்கு அடிமையான 7 பேர் புனர்வாழ்வு மையங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காலப் பகுதியில், 101 கிராம் ஐஸ் ரக போதைப்பொருள், 192 கிராம் ஹெரோயின், 10 ஆயி ரத்து 611 போதை மாத்திரைகள் உள்ளிட்ட பல போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

# 15 வயது மாணவன் கடலில் மூழ்கிச் சாவு

15 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அம்பலாந்தொட்டை தர்மபால மாவத்தையைச் சேர்ந்த மேற்படி மாணவன் கடலில் நீராடச் சென்ற போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று அம்பாந்தோட்டை துறை முகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் கடலில் மூழ்குவதைக் கண்ட பிரதேசவாசிகள் உடனடியாக அவரை மீட்டு அம்பாந்தோட்டை பொது வைத் தியசாலையில் சேர்த்தபோதும் அவர் ஏற்கனவே உயிரி ழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.






# ஜோர்தானில் நிர்க்தியான நிலையில் இலங்கைப் பணியாளர்கள் 220 பேர்!

## நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை

ஜோர்தானில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த 220 இலங்கையர்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

எனவே அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளுக்கு அமைச்சர் மனுஷ நாணயக்கார பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படுவதால் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து ஜோர்தானில் உள்ள இலங்கை தூதரகத்தின் தொழிலாளர் நலப் பிரிவு, அந்த நாட்டு தொழில் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளது என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொழிலாளர்கள் நாட்டுக்குத் திரும்புவதற்கான விமானப் பயணச் சீட்டை வழங்க அநத் நாட்டு அதிகாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரசுக்கு அத்தியாவசியமான வாகனம் இறக்குவதற்கு வர்த்தமானி வெளியீடு!

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



வாகன இறக்குமதிக்காக வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானி அரசுக்கு அத்தியாவசியமான சில வாகனங்களுக்கு மாத்திரமே வெளியிடப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பொது வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வர்த்தமானி வெளியிடப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில அரச நிறுவனங்களின் சில அத்தியாவசிய நடவடிக்கைகளுக்காக சில வாகனங்களை கொண்டு வருவதற்காகவே வர்த்தமானி வெளியிடப்பட்டது.

வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு அதே வெளிநாட்டு உதவியில் கிடைக்கும் பணத்தில் கொண்டு வரப்படுகிறது.

கல்வி அமைச்சுக்கு இரண்டு பேருந்துகள் வெளிநாட்டு திட்டங்களின் கீழ் கிடைக்கின்றன. சுகாதார அமைச்சுக்கு 21 இரட்டை கெப் வண்டிகள், அதே போன்று நடமாடும் மகப்பேறு மருத்துவமனைகளுக்கு 03 வாகனங்கள், தொழிலாளர் அமைச்சுக்கு ஒரு வாகனம், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் பயணிகள் விமானத்தில் இருந்து ,றங்குவதற்கு 03 வாகனங்கள்.

இவை அரச நிறுவனங்களுக்கு அத்தியாவசியமானவை. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் உள்ள மற்ற வாகனங்கள் அனைத்தும் வெளிநாட்டு உதவி மூலம் கிடைத்த பணத்தை பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.- என்றார்.




# மாவீரர் தினத்தன்று கைதானவர்களை சிறை சென்று பார்வையிட்ட கஜேந்திரன்





(பழுவூரான்)

மாவீரர் தினத்தன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் நேற்றுக் காலை மட்டக்களப்பு சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸும் சிறைச்சாலைக்குச் சென்றிருந்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழர்கள் நிம்மதியாக...

அதில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள்.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்துக்கு நாம் முடிவு கட்டிய பின்னர் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ்கின்றார்கள். ஆனால், அவர்களை வைத்துக்கொண்டு இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளும், வெளிநாடுகளில் வாழும் புலிகளின் ஆதரவாளர்களும் சுயலாப அரசியலை நடத்துகின்றனர். இது கவலையை ஏற்படுத்தும் விடயம். அவர்கள், தமிழ் மக்கள் மீது போராட்ட சிந்தனையைத் தூண்டினாலும் அந்த மக்கள் மீண்டும் போரை விரும்பவில்லை. நிம்மதியான வாழ்க்கையே அவர்களின் விரும்பம். அதை நாம் அவர்களுக்கு 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தவுடன் ஏற்படுத்திக் கொடுத்து விட்டோம்.

வடக்கு – கிழக்கில் ராஜபக்ஷக்களை ஆதரிக்கும் தமிழ் உறவுகள் பலர் உள்ளனர். அவர்களுக்கு நாம் என்றும் நன்றி கூறுவோம்.

எதிர்வரும் தேர்தல்களில் வடக்கு – கிழக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்படாது. வழமை போன்று எமக்குரிய வாக்குகள் கிடைக்கும். மொட்டுக் கட்சியின் வெற்றியில் தமிழ் மக்களின் பங்களிப்பும் முக்கிய இடம் வகிக்கும்." – என்றார்.

### கிளிநொச்சி...

18 வயதுடைய கிருஸ்ணன் சதீசன் ஆகிய இரு இளைஞர்களே சடலங்களாக மீட்கப்பட்டனர் என்று விசாரணைகளில் தெரியவந்தது.

மேற்படி இளைஞர்கள் பிரவேசித்த மோட்டார் சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் வீழ்ந்தது எனவும், அதன்போது ஏற்பட்ட காயங்களால் இந்த மரணம் சம்பவித்திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

இந்தநிலையில், சடலங்களைப் பார்வையிட்ட நீதிவான் அவற்றை பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

### யாழ். காரைநகரில்...

வருகின்றார்.

தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலக இணைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பங்குபெற்றுதலுடன் நாளை காலை 10 மணிக்கு இந்தப் பொங்கல் விழா இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் வியாவில் வாழ் மக்கள் வர்த்தக சமூகத்தினருடன் வெளிநாட்டு வாழ் உறவுகளும் இணைந்துள்ளனர்.

# நாட்டில் போதை ஒழிப்புக்கான யுத்திய நடவடிக்கையை அழுத்தங்களுக்கு அடிபணிந்து கைவிடப்போவதில்லை!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவிப்பு



நாட்டில் தற்போது முன்னெடுக்கப்படும் போதை ஒழிப்புக்கான யுத்திய நடவடிக்கையை சர்வதேச, உள்நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து ஒருபோதும் கைவிடப்போவதில்லை.

இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தூதர் வோல்கர் டிர்க் மற்றும் உள்நாட்டு சிவில், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் போதையொழிப்பு தொடர்பில் முன்னெடுத்து வரும் யுத்திய நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் எதேச்சதிகாரமாக செயற்படுவது தொடர்பில் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை இந்த நடவடிக்கைளில் பாதுகாப்புத் தரப்பினரை ஈடுபடுத்துவது தொடர்பில் மீளாய்வு செய்யுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனை அடுத்துக் கருத்துத் தெரிவித்த கோது டிரான் அலஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் போதைப்பொருள் பாவனை மற்றும் போதைப்பொருள் விநியோகத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நோக்கத்தில் இந்தச் செயற்றிட்டமானது கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் இடம்பெற்று வருகிறது.

இதுவரையில் கணிசமான அளவில் போதைப்பொருள் கடத்தல்களில் பங்கேற்பவர்கள், விற்பனைகளில் ஈடுபடுபவர்கள் உள்ளிட்டவர்களின் சொத்துக்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவ்விதமான நடவடிக்கை தொடரும் பட்சத்தில் குறுகிய காலத்தில் போதைப் பொருள்களை ஒழித்த நாடாக இலங்கை உருவெடுக்கும் என்பதில் எனக்கு தீவிரமான நம்பிக்கை உள்ளது.

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு போதை ஒழிப்பு முக்கிய விடயமாக இருக்கின்றது. ஆகவே இந்தச் செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும். மனித உரிமைகள் உள்ளிட்ட வெவ்வேறு பெயர்களில் உள்நாட்டிலோ, சர்வதேசத்திலோ என்மீது அழுத்தங்கள் பிரயோகிப்பதற்கு முனைந்தால் அதற்கு அடிபணியப்போவதில்லை.

முன்னதாகவே, நாட்டில் உள்ள இராஜதந்திரிகள் என்னுடன் இந்த விடயங்கள் சம்பந்தமாக உரையாடியுள்ளனர். அவர்கள் இந்த கடுமையான நடவடிக்கையை தளர்த்துமாறு கோரினார்கள்.

ஆனால் போதைப் பொருளால் எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரே பாதிக்கப்படுகின்றனர் என்பதிலுள்ள பாரிய ஆபத்துக்களை அவர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளேன்.

நான் தற்போதுள்ள பதவியில் நீடிக்கும் வரையில் நிச்சயமாக போதைப் பொருளுக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பேன். போதைப் பொருளற்ற நாட்டை மீளமைப்பதற்காக எனது அர்ப்பணிப்புக்கள் தொடரும்.

இந்த முன்னெடுப்பில் அனைவரும் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றனர். அதேநேரம், விமர்சனங்களைக் கண்டு பின்வாங்கப்போவதில்லை.- என்றார்.

# ரூ. 12 லட்சத்துக்கு மேல் வருமானம் பெறுவோர் நாட்டு வரிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும்

## நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு

12 லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் நாட்டின் வரிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இல்லையெனில், தேவையான தீர்வுகளை எங்களால் மேற்கொள்ள முடியாது.

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வரமாறு,

ஒரு நாடாக நாம் மிகவும் கடினமான முடிவுகளை எடுத்துள்ளோம். இன்று நாடு ஒரு குறிப்பிட்ட நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. சந்தர்ப்பவாத, அரசியல் கோணத்தில் இருந்து பார்க்காமல் சரியான கண்ணோட்டத்தில் பார்த்தால் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும்.

மக்களுக்கு சிரமம் உள்ளது. அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.



நாங்கள் அதை நிராகரிக்கவில்லை. வீழ்ச்சியுற்ற நாட்டை ஒரேயடியாக மீட்க முடியாது. சிரமங்களிலிருந்து விடுபட, முதலில் ஒரு திட்டம் தேவை.

குறுகிய கால சிரமங்கள் இருக்கும். அந்த அசௌகரியங்களைத் தவிர்க்க சமூக நலத்திட்டங்களை வழங்கியுள்ளோம். செழிப்பைப் பார்க்கும் அதே கண்களால் வறுமையைப் பார்க்காதீர்கள்.

வரி செலுத்த வேண்டிய மக்களை வரி செலுத்த ஊக்குவிக்க வேண்டும். 12 லட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் உள்ளவர்கள் நாட்டின் வரிக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். இல்லையெனில், தேவையான தீர்வுகளை எங்களால் மேற்கொள்ள முடியாது.

அவர்கள் கடனைச் செலுத்த வேண்டும். மற்றபடி குறைந்த வரி செலுத்தியோ, வரி கட்டாமல் இருந்தோ வரி அதிகம் என்று கூச்சல் போடுவதில் அர்த்தமில்லை.

பொருளாதார நெருக்கடியால், இந்த நிலையைப் புரிந்து கொள்வது பலருக்கு கடினமாக உள்ளது. நாட்டை மீட்டெடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்பட வேண்டும்.- என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மைத்திரியின் கோமாளித்தனம்

*2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்காவிடின் நாடு இன்று இருப்பதை விட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.*

*தெஹிவளையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார்.*

*“2015ஆம் ஆண்டு எனது வெற்றியின் காரணமாக ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகின் பலம் வாய்ந்த நாடுகளின் ஆதரவை மீண்டும் பெற முடிந்தது.*

*ஊழல், மோசடி, திருட்டு, வீண் விரயம் மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை நிரப்பிக்கொண்டு நாட்டை பாதாளத்திற்கு கொண்டு சென்ற ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர முடிந்தது.*

*எனது போட்டியாளரான மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தால் நாடு இன்று இருப்பதை விட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும்.” - என்று அவர் கூறியிருக்கின்றார்.*

*அவர் கூறுவது உண்மைதான். ஆனால் ஒரு சில விடயங்களை மறந்து அல்லது மறைத்து பாதி விவரங்களை அவர் கூற முற்படுவதுதான் கவனிக்கப்பட வேண்டிய விடயம்.*

*இவ்வளவு கஷ்டப்பட்டு ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சியை வீழ்த்தி, மைத்திரிபால சிறிசேனவை தேர்தலில் வெற்றி பெற வைத்து, அவரை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தால், இப்போது ஆறுதலாக இருந்து ‘தத்துவம்’ பேசும் அவர் அப்போது பதிலுக்கு என்ன செய்தார்?*

*தன்னை அதிகாரத்திற்குக் கொண்டு வந்த தரப்புகளை, நன்றி மறந்து, சட்ட விரோதமான முறையில் அரசாங்கத்திலிருந்து துரத்த முயன்றார். இப்போது ஊழல், மோசடி, திருட்டு, வீண்விரயம் மற்றும் வெளிநாட்டு வங்கிகளில் பணத்தை நிரப்பிக் கொள்ளும் கொடூர சாம்ராஜ்யம் எனத்தான் விமர்சிக்கும் தரப்புகளிடம் பின் கதவால் அரசாங்கத்தை ஒப்படைக்கும் மிக மிக மோசமான - அரசியல் அநாகரீகமான - கீழ்மைத்தனத்தைத்தான் அதிகாரத்தில் இருந்தபடி அவர் செய்தார்.*

*அந்தத் தரப்புகளைக் கொண்டு சட்ட விரோத அரசு ஒன்றை ஸ்தாபித்தார். நாடாளுமன்றத்திலும், வெளியிலும், நீதிமன்றத்திலும் பெரும் நியாயப் போராட்டம் ஒன்றை நடத்தித்தான், அவர் பின் கதவால் நிலைநிறுத்திய அரசைத் துரத்த வேண்டியிருந்தது. அந்த அரசியல் இழிசெயலுக்காக உயர் நீதிமன்றத்திடம் அவர் குட்டு வேண்ட வேண்டியவராகவும் இருந்தார்.*

*அந்த ஊழல், மோசடி, திருட்டு, வீண்விரயத் தரப்பை சட்டவிரோதமாக பின்கதவால் ஆட்சியதிகாரத்தில் அமர்த்த முழுமூச்சுடன் முயன்ற ‘கேடி’ அரசியல்வாதி, இப்போது அவர்களை அதிகாரத்திலிருந்து கலைத்தவர் தாம் என்று நாட்டுக்குப் படம் போடவும் முயலுகின்றார். நாட்டு மக்கள் அவ்வளவு விரைவாக விடயங்களை மறந்து விட மாட்டார்கள்.*

*அந்த ஊழல் சாம்ராஜ்யத்திற்கு மீள உயிர் கொடுக்கும் வகையில் செயல்பட்டவர்களில் மிக முக்கியமானவர்தான் இந்த மைத்திரிபால சிறிசேன.*

*ராஜபக்ஷக்களின் எதேச்சாதிகார ஆட்சிக்கு எதிராக எதிரணிகள் ஒன்றுபட்டு, மிகுந்த கஷ்டப்பட்டு, மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கிய போது அந்தப் பதவியை வைத்து சுதந்திர கட்சியின் தலைமையைப் பிடுங்கினார் அவர். பிடுங்கி எடுத்து என்ன செய்தார்? அந்தக் கட்சியே முழுமையாகக் கரைந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற புதுக் கட்சியை தோற்றுவிக்க வழி சமைத்தார். தனது சுயநல அரசியல் எதிர்காலத்திற்காக நாடாளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சி தலைமையிலான கூட்டணியில் தனது கட்சியோடு சரணாகதி அடைந்தார். அந்தக் கட்சியின் எம்.பியாகத்தான் அவர் இப்போதும் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார்.*

*அவரின் தவறான - பொறுப்பற்ற - தகைமையற்ற - ஜனாதிபதிப் பதவித் தலைமைத்துவத்தினால்தான் பல்வேறு முன்னெச்சரிக்கை அறிக்கைகள் தாராளமாக கிடைத்தும் ஈஸ்டர் ஞயிறு குண்டு தாக்குதல்களையும் அதனால் நேர்ந்த பேரழிவுகளையும் தடுக்க முடியவில்லை.*

*தேசிய இனப் பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காணும் அருமையான வாய்ப்பு நிறைவு செய்யப்படாமல் குழப்பப்பட்டமைக்குக் காரணமான நாட்டின் தலைவரும் அவர்தான்.*

*இப்போதும் ராஜபக்ஷக்களின் கட்சியில் தெரிவான எம்.பியாக இருந்து கொண்டு அரசியல் சுயநலன்களுக்காக அவர்களைத் திட்டும் வேலையை அவர் செய்கிறார். அப்படிச் செய்வதற்கான தார்மீகத் தகுதியோ, நியாயமோ, உரிமையோ மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடையாது.*

*நாட்டை நல்வழிப் பாதையில் கட்டியெழுப்பக் கிடைத்த அருமையான வாய்ப்பைப் போட்டடித்துக் குழப்பிய அரசியல் கோமாளி என்பதை தவிர அவருக்கு வேறு பொருத்தமான தகைமைகள் ஏதும் கிடையாது.*

## கிலோ 1000 ரூபாவை எட்டியது கரட்டின் விலை!

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் வரலாற்றில் முதல் தடவையாக ஒரு கிலோ கரட்டின் மொத்த விலை நேற்று (13) இரவு முதல் 1000 ரூபா தொடக்கம் 1100 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பிரதேசத்தில் உள்ள மரக்கறி விவசாயிகளிடம் இருந்து கரட்டை 900 ரூபாவுக்குக் கொள்வனவு செய்ததாக நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தின் மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

லீக்ஸ், பீட்ரூட், முட்டைகோஸ் ஆகியவை 450-500 ரூபாவுகும், போஞ்சி, கறி மிளகாய்ஆகியவை 750-800 ரூபாவுக்கும் விறபனை செய்யப்படுகிறது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒரு கிலோ பச்சை மிளகாய் 1600 ரூபாவாகவும்முள்ளங்கி கிலோ 350 ருபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது என்று விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் நுவரெலியா பொருளாதார நிலையத்தில் ஒரு கிலோ கரட் 350-400 ரூபாவுக்கும், ஒரு கிலோ ப்ரோக்கோலி 750 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது. இன்றைய தினத்தில் ப்ரோக்கோலி ஒரு கிலோ 7000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# மட்டக்களப்பு உதவி மாவட்ட செயலர் பிரதேச செயலராகப் பதவியுயர்வு!



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலர் ஆ.நவேஸ்வரன் பிரதேச செயலராகப் பதவி உயர்வு பெற்று மோரவேவ பிரதேச செயலகத்தில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். அவருக்கான பிரியாவிடை நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

34 வருட அரச சேவையைக் கொண்ட இவர் முகாமைத்து உதவியாளராக 1989 ஆம் ஆண்டு அரச நியமனம் பெற்று, அதன் பின்னர் இலங்கை நிர்வாக சேவை பரீட்சையில் கிழக்கு மாகாணத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டிருந்தார்.

பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இவர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஆறரை வருடங்கள் உதவி மாவட்ட செயலாளராகச் சேவையாற்றியுள்ளார்.

இவரது சேவையை வாழ்த்திக் கௌரவிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலர் திருமதி.ஜே.ஜே. முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது உதவி மாவட்ட செயலர் ஆ.நவேஸ்வரனின் சேவையைப் பாராட்டி மலர்மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீகாந்த் உள்ளிட்ட மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மன்னார் காடுகளை அழிப்பதை நிறுத்த வேண்டியது அவசியம்!

## ஒருங்கிணைப்புகுழுக் கூட்டத்தில் வலியுறுத்து



( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவுப் பகுதிக்குள் விறகுக்காகப் பாரியளவான மரங்கள் சட்டவிரோதமாக அழிக்கின்றமை தொடர்பாக கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அது இன்னும் தொடர் கதையாகவே காணப்படுவதாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மன்னார் தீவுப் பகுதிக்குள் விறகுக்காக பாரியளவான மரங்களை சட்டவிரோதமாக அழிக்கின்றமை தொடார்பாக மன்னாரில் முன்பு நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதாவது தனியார் நிறுவனங்கள் இந்தச் செயல்பாட்டில் ஈடுபட்டு வருவதால் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் திணைக்களத்துக்கு வட மாகாண ஆளுநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இது தொடர்பாக அண்மையில் மன்னார் ஒழுங்கிணைப்புகுழு இணைத்தலைவர் இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் இதன் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது.

அப்போது, மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் இங்கு கருத்து தெரிவிக்கையில்,

இந்தச் செயல்பாடு இன்னும் தொடர் கதையாகவே காணப்படுகின்றது. பொலிஸாரிடம் பச்சை மரங்களுடன் வந்த உழவு இயந்திரத்தை நாங்கள் கையும் மெய்யுமாக பிடித்துக் கொடுத்தும் அதற்கு என்ன நடந்தது என்பதும் எமக்குத் தெரியவில்லை.

குறுகிய விஸ்தீரணம் கொண்ட மன்னார் தீவு தற்பொழுது மின்சார காற்றாலை அமைப்பதாலும் கனியவள மணல் அகழ்வதாலும் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறது. இதனை உணர்ந்து மக்கள் உணர்ந்து போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர். அதே நேரத்தில் இத்தீவில் விறகுகளுக்காக நிறுவனங்கள் பச்சை மரங்களை வெட்டுவதன் மூலம் காடுகள் அழிக்கப்பட்டு தீவு தொடர்ந்து அழிவுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஆகவே பொலிஸ் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் இதன் மட்டில் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டது.

# வெள்ள ஆபத்து உள்ள இடங்களில் பொலிஸாரின் நடவடிக்கை அவசியம்



## மட்டக்களப்பு அரச அதிபர் தெரிவிப்பு

(ந.குகதர்சன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள நீர் கடந்து செல்லும் ஆபத்தான இடங்களில் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே. முரளிதரன் பணிப்புரை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்த அடை மழை காரணமாக பொது மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் சித்தாண்டி, கிரான், வாகரை, வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பல இடங்களில் பிரதான வீதியை குறுக்கறுத்து வெள்ளநீர் செல்கிறது.

இதனால் அந்தப் பகுதியூடான போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு நாசிவன் தீவு பகுதியிலும் பிரதான வீதி ஊடாக இரண்டு அடிக்கு மேலாக வெள்ள நீர் வேகமாக கடந்து செல்வதால் பொது மக்கள் அந்தப் பகுதியில் வேடிக்கை பார்க்கச் செல்வதையும் ஆபத்தான முறையில் அதனை கடந்து செல்வதையும் காணக் கூடியதாக உள்ளது.

வாழைச்சேனைப் பகுதியைத் தேர்ந்த இளைஞர் பாதையை ஊடாக கடந்து செல்ல முற்பட்ட போது வெள்ள நீரால் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அரச அதிபர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

மக்களை பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்க உள்ளார் என்றும் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி.ஜே.ஜே. முரளிதரன் தெரிவித்தார்.



## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 920 வர்த்தக நிலையங்கள் மீது கடந்த வருடம் சட்ட நடவடிக்கை!

### ஒரு கோடி 24 லட்சம் ரூபா அபராதம் விதிப்பு

(பழுவூரான்)

பாவனைக்கு உதவாத பொருள்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டு விலைகளை மீறிப் பொருள்களை விற்பனை செய்தமை போன்ற குற்றச் செயல்களுக்காகக் கடந்த வருடம் மட்டக்களப்பில் 920 வர்த்தக நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பாவனையாளர்களுக்குப் பொருத்தமான விலையில் அவசியமான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக அரசு விலை நிர்ணயங்களை மேற்கொண்டுள்ளது. கட்டுப்பாட்டு விலைகளையும் நடைமுறைப்படுத்தி, மக்களுக்கு அவை தொடர்பான கண்காணிப்புக்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை ஊடாக மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2023 ஜனவரி மாதத்தில் இருந்து டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் 1200 இற்கும் அதிகமான வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பதிகாரி என். முஹம்மத் சப்றாஸ் தெரிவித்தார்.

அவற்றில் 920 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் மட்டக்களப்பு, ஏறாவூர், களுவாஞ்சிகுடி, வாழைச்சேனை, வாகரை ஆகிய நீதிவான் நீதி மன்றங்களில் வழங்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான சுற்றி வளைப்புகளால் ஒரு கோடி 24 லட்சத்து 54 ஆயிரத்து 50 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது என்று மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

அத்தோடு கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலை நிர்ணயம், விலையைக் காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை, அத்தியவசியப் பொருள்களை விற்பனை செய்யாது மறுத்தமை மற்றும் பதுக்கியமை, மின் மற்றும் இலத்திரனியல் சாதனப் பொருள்களுக்கு கட்டுறுத்து காலம் (றுயசசயவெல) வழங்காமை, பொருள்களை விற்பனை செய்யும் போது முறையான பற்றுச்சீட்டு விநியோகிக்காமை போன்ற காரணங்கள் இந்தச் சுற்றிவளைப்புகளின் போது அதிகாரசபையால் கண்டறியப்பட்டன.

இதேவேளை 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்த வற்வரியைக் காரணம் காட்டி, விலைகளை அதிகரித்து, போலி விலையில் பொருள்களின் விற்பனைகள் இடம்பெற்று வருகின்றது. இது குறித்து, கண்டறிவதற்காக தொடர்ந்தும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாவட்ட பொறுப்பதிகாரி என். முஹம்மத் சப்றாஸ் மேலும் சுட்டிக்காட்டினார்.

# கிழக்கு மாகாணத்தின் சேவைகளை பாராட்டிய சர்வதேச நாணய நிதியம்



(ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன், அப்துல்சலாம் யாசீம் )

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று (13) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானைச் சந்தித்துக் கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள், வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணம் குறுகிய காலத்தில் அடைந்துவரும் வளர்ச்சிக்கு பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் பீட்டர் ப்ரூயர் (சிரேஷ்ட பணித் தலைவர்), சர்வத் ஜஹான் (சர்வதேச நாணய நிதிய வதிவிடப் பிரதிநிதி), சோபியா ஜாங் (சிரேஷ்ட பொருளாதார நிபுணர்), ஹூய் மியாவ் (சிரேஷ்ட நிதித்துறை நிபுணர்), ஹோடா செலிம் (சிரேஷ்ட பொருளாதார நிபுணர்), டிமிட்ரி ரோஸ் கோவ் (சிரேஷ்ட பொருளாதார நிபுணர்), சந்தேஸ் தூங்கானா (பொருளாதார நிபுணர்), மற்றும் மனவே அபேய



விக்ரம உள்ளூர் பொருளாதார நிபுணர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சோழன் உலக சாதனை படைத்த மாற்றுத் திறனாளி மாணவன்!

## பாராட்டிப் பரிசளித்த கல்வி இராஜாங்க அமைச்சர்



(பொகவந்தலாவ நிருபர்)

அதிக ஞாபக திறன் மூலம் சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்த மாற்று திறனாளியான மாணவன் பாக்கியராசா முரளிதரனை, கல்வி இராஜங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கல்வி அமைச்சிக்கு அழைத்துப் பாராட்டி கௌரவித்துள்ளார். பண பரிசில்களையும் வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் உட்பட கல்வி அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பலாங்கொடையில் இயங்கிவரும் ஆர். பி. சி. சி. தமிழ் வித்யாலயத்தில் 4 ஆம்வகுப்பில்கற்றுவரும் மாணவனே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மாற்றுத் திறனாளி சிறுவனான பாக்கியராசா முரளிதரன், அவருடைய ஆசிரியர்களின் கடுமையான பயிற்சி மற்றும் தீவிர முயற்சியின் காரணமாக தன்னுடைய அதிக ஞாபகத் திறனின் மூலம் உலக நாடுகளின் தலை நகரங்களை அவற்றின் கொடிகளை வைத்து அடையாளம் காட்டுதல், உலக நாடுகள் ஒவ்வொன்றினதும் நாணயங்கள், ஒவ்வொரு நாடுகளிலும் பேசப்படும் மொழிகள், உலக நாடுகளின் தற்போதைய தலைவர்கள் பற்றி, இலங்கை, உலக நாடுகள் மற்றும் விளையாட்டு துறை சார்ந்த பொது அறிவுக் கேள்விகளுக்கான பதில்களை ஒப்புவித்துள்ளார்.

அதேவேளை, உலக வரைபடத்தில் நாடுகளின் அமைவிடங்களையும் அடையாளப்படுத்தி சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

மூன்று மொழிகளிலும் தேர்ச்சி பெற்றுள்ள அந்த மாணவனைத் தனது அலுவலகத் அழைத்திருந்தார் கல்வித்துறை இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார்.

அந்த மாணவன் அங்கிருந்தவர்களின் பல நூறு கேள்விகளுக்கு தொடர்ந்து 2 மணி நேரமாக நேர்த்தியாகப் பதிலளித்தார். மாணவனின் அற்புதமான ஞாபகத் திறனைக் கண்டு வியந்த அமைச்சர் அவரை வெகுவாகப் பாராட்டினார்.

மாணவனின் திறனை மேலும் வளர்ப்பதற்காக எதிர்காலத்தில் தேவையான உதவிகளை செய்வதாகவும் வாக்குறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீ நாகவாணி ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெருமாள் நீலமேகம், மாணவனின் ஆசிரியை திருமதி சுந்தரம் எலிசபெத் மற்றும் மாணவனின் தாய் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மன்னார் நானாட்டான் கால்நடை பிரச்சினை தொடர்பில் ஆராய்வு!

## தீர்வு பெற்றுத் தருவார் என்று அமைச்சர் டக்ளஸ் உறுதி

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் கால்நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரவை இன்றி பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் பிரச்சினை தொடர்பில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

கால்நடை வளர்ப்பாளர்களின் அழைப்பின் பெயரில் நானாட்டான் பள்ளக்கமம் பகுதிக்கு நேற்று சனிக்கிழமை (13) மாலை விஜயம் ஒன்றை மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தலைமையிலான குழுவினர் கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

மன்னார் நானாட்டான் பகுதியில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ள நிலையில், மேய்ச்சல் தரவை இன்மையால் ஒவ்வொரு வருடமும் அதிக கால்நடைகள் இறந்து போகின்றன. பல கிலோ மீற்றருக்கு அப்பால் வேறு பிரதேச செயலர் பிரிவில் மேய்ச்சலுக்காக கொண்டு செல்ல வேண்டிய நிலையும் காணப்பட்டு வந்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் பல முறை கால்நடை வளர்ப்பாளர்கள் மன்னார் ஒருங்கிணைப்பு கூட்டத்தில் தெரியப்படுத்தியும் இதுவரை குறித்த பிரச்சினை தீர்க்க படாமலே உள்ளது.

ஆளுநர் தலைமையில் இடம்பெற்ற அபிவிருத்தி குழு கூட்டம் ஒன்றில், கட்டுக்கரை குளத்தின் கீழ் காணப்படும் புல்லறுத்தான் காண்டல் பகுதி யுத்தத்துக்கு முன் மேய்ச்சல் தரையாக காணப்படது. தற்போது அது வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகிறது என்று கால்நடை வளர்ப்பாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நிலையில் அந்தக் காணியை அடையாளப்படுத்தி மேய்ச்சல் தரவைக்கு ஒதுக்குமாறு அரச அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். முன்னாள் நானாட்டான் பிரதேச செயலாளர் உட்பட சில உயர் அதிகாரிகளின் அக்கறையின்மையால் அந்தக் காணி விடுவிக்கப்படவில்லை.

அந்த அரச காணியைச் சிலர் அடாத்தாகப் பிடித்துக் காடுகளை அழித்து நெற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர் என்று கால்நடை வளர்ப்பாளர்கள் குற்றம் சுமத்தயுள்ளனர்.

இந்த நிலையில் பள்ளகமம் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தலைமையிலான குழுவினர், நானாட்டான் பிரதேச செயலாளர் கனகாம்பிகை சிவசம்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர் சங்கத்தினருடன் கலந்துரையாடினர்.

இதன் அடிப்படையில் விரைவில் குறித்த பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுத் தருவர் என்று தெரிவித்துள்ளனர். அதே நேரம் கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் ஏனைய பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வை பெற்றுத் தருவோம் என்று உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மன்னார் நானாட்டான் கால்நடை வளர்ப்பாளர்கள், சவாரி சங்க உறுப்பினர்கள், கட்டுக்கரை திட்டமிடல் குழு அங்கத்தவதவர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.





# அட்டாளைச்சேனைக்கு விஜயம் செய்த முஷாரப் எம்.பி. உதவிகள் வழங்கினார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை புறத்தோட்டம் கிராமத்துக்கு விஜயம் செய்த திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் அந்தப் பகுதி மக்களை சந்தித்ததுடன் நிலைமைகளையும் கேட்டறிந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் அட்டாளைச்சேனை இணைப்பாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம்.அறூஸ் பங்கேற்புடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தன்னால் முடிந்த உதவிகளை வழங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் பொத்துவில் கிளையின் தலைவர் மௌலவி ஏ.முகைதீன் பாவா ஷர்கி, ஹபீப் மௌலவி, நாடாளுமன்ற உறுப்பினரின் மக்கள் தொடர்பு அதிகாரி அஸாம் அப்துல் அஸீஸ், நாடாளுமன்ற உறுப்பினரின் ஒலுவில் இணைப்பாளர் எம்.ஜே.எம்.அஸ்ஹர், மத்திய குழு செயலாளர் ஏ.எல்.கியாஸ்தீன் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.




தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு
கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டு கழக
ஏற்பாட்டில் DAN TV யின்
அனுசரனையுடன்



வடமராட்சி கிழக்கில்
03வது மாபெரும்
பட்டத் திருவிழா
2024

காலம் : 16.01.2023 (செவ்வாய்கிழமை)
நேரம் : பிற்பகல் 2.00 மணி
இடம் : கட்டைக்காடு சென்மேரீஸ் விளையாட்டுக் கழக மைதானம்

தங்களின் கற்பனைத்திறனுக்கு எம் மண்ணில் ஓர் அங்கீகாரம் தமிழரின் பண்பாட்டு கலையை எம்முடன் சேர்ந்து கொண்டாடி பணப்பரிசில்களையும் வெற்றி பெற்று தைபொங்கலை கொண்டாடுங்கள்.



முதலாம் பரிசு 100,000/=
இரண்டாம் பரிசு 50,000/=
மூன்றாம் பரிசு 25,000/=



பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்
றஜனி : 077 843 5381 தயாபரன் : 077 152 9308
ஏற்பாட்டுக்குழு



# “என் மறைவு சுதந்திரத்தை வீழ்த்தாது”

## என்று கூறியவர் லசந்த விக்ரமதுங்க!

**(ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க 2009 ஆம் ஆண்டு 8 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.லசந்த விக்ரமதுங்க கொல்லப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.)**

- ஜங்கரன் விக்கினேஸ்வரா -

ஈழப்போர் உச்சமடைந்திருந்த 2009 இல் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். இவரது படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை சில மாதங்களாக மௌனமாகியது. சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டனர்.

“எனது கொலை சுதந்திரத்தின் தோல்வியாக கருதப்படாது, ஆனால் உயிர் பிழைப்பவர்களுக்கு அவர்களின் முயற்சிகளை முடுக்கிவிட ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். உண்மையில், இது நமது அன்புக்குரிய தாய்நாட்டில் மனித சுதந்திரத்தின் புதிய சகாப்தத்தை உருவாக்கும் சக்திகளை ஊக்கப்படுத்த உதவும் என்று நான் நம்புகிறேன்.” என்று தெரிவித்துத் தனது மரணத்தை அறிந்திருந்தவர்தான் லசந்த.

லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கு எதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்பாகவும் மிக நீண்டகாலமாக மிகக் கடுமையான கட்டுரைகளை ‘சண்டே லீடர்’, ‘மோர்னிங் லீடர்’ மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான ‘இருதின’ என்பன வெளியிட்டு வந்ததால் இவர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து கடுமையான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகி வந்திருந்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. 2009 ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி, சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவின்படி, லசந்த விக்ரமதுங்கவின் சடலம் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, மேலதிக விசாரணைகள் இடம்பெற்றன. ஆயினும் இதுவரையில் முழுமையான தீர்ப்பு வரவில்லை.

மிகவும் இளவயதிலேயே ‘சன்’ பத்திரிகையில் ஒரு செய்தியாளராகச் சேர்ந்து தனது ஊடகத்துறை வாழ்வை ஆரம்பித்த லசந்த 1982 ஆம் ஆண்டில் ‘தி ஐலண்ட்’ பத்திரிகையில் இணைந்தார்.

அதே நேரம் அரசியலிலும்

(13ஆம் பக்கம் பார்க்க)

# "என் மறைவு சுதந்திரத்தை வீழ்த்தாது"

12ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன்னை இணைத்துக் கொண்டார். 1989 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு வடக்குத் தொகுதியில் போட்டியிட்டார். ஆனாலும் அவர் தெரிவு செய்யப்படவில்லை. 1994 ஆம் ஆண்டில் சண்டே லீடர் பத்திரிகையை ஆரம்பித்தார்.

### தமிழ் ஊடகம் மீதான அடக்குமுறை

சிங்கள ஊடகவியலாளர்கள் அடக்கப்படுவதிலும் மேலாக, ஈழத்தில் தமிழ் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. 1981 இல் ஈழநாடு பத்திரிகை எரிப்பு முதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளால் பிரயோகிக்கப்பட்டது.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்கு முறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். அது போன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணி ரூபசிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.



### சிங்கள ஊடகவியலாளர் கொலை

இலங்கையில் சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டு வந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இலங்கையில் 1990ஆம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு நிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம். தமிழ் நெற் இணையத்தினுடய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத் தகவல்களை வெளிக் கொண்டுவந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

### லசந்த மீதான கொலை முயற்சிகள்

லசந்தவைக் கொலை செய்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்துக்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கிரனேட் வீசப்பட்டது. 2005 ஒக்ரோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்துக்குத் தீவைத்து நிர்மூலம் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009, ஜனவரி 8 வியாழக்கிழமை காலை 09:30 மணியளவில் கொழும்பு கல்கிசையில் உள்ள 'லீடர் பப்ளிகேஷன்' அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். தலையிலும் மார்பிலும் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் உடனடியாக களுபோவில மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். பிற்பகல் 1.45 மணி

(14ஆம் பக்கம் பார்க்க)

# “என் மறைவு சுதந்திரத்தை வீழ்த்தாது”

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

### லசந்த படுகொலையை கண்டித்த சர்வதேசம்

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்துக் கொழும்பில் 2009 ஜனவரி 9 ஆம் நாளில் பெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. நூற்றுக் கணக்கான ஊடகவியலாளர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, உலக சமாதான சபை அத்தனையும் அவருக்காகக் அறிக்கைகள் வெளியிட்டன.

படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவுக்கு ஐ.நாவின் கல்வி மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ 2009 ஆம் ஆண்டுக்கான உலக பத்திரிகை சுதந்திர விருதை வழங்கியது. இவ்விருது 2009, மே 3 ஆம் நாளன்று உலக பத்திரிகை சுதந்திர தினத்தில் கட்டார் நாட்டில் வைத்து வழங்கப்பட்டது.

### இறுதி ஆசிரிய தலையங்கம்

ஜனவரி 11 ஆம் திகதி வெளியாக வேண்டிய ‘சண்டே லீடர்’ பத்திரிகைக்கு, “மரணத்தின் பாதையை நான் அறிவேன்” என்ற தலைப்பில் ஒரு தலையங்கத்தை ஜனவரி 7ஆம் திகதியே லசந்த எழுதுவிட்டார். இந்தத் தலையங்கம் அவர் இறந்த பின் பிரசுரமானது. லசந்த விக்கிரமதுங்க எழுதிய தலையங்கத்திலிருந்து சில பகுதிகள்.

*“என் மரணத்தின் பாதையை நான் அறிவேன். நீ போலியான சத்தத்தை எழுப்பிக்கொண்டு, பொலிஸை அழைத்து வேகமாக விசாரணை மேற்கொள்வாய். கடந்த காலங்களில் நீ உத்தரவிட்ட விசாரணைகளைப் போலவே, இப்போதும் நடக்கும். ஆனால், ஒன்றும் வெளியில் வராது. நம் இருவருக்கும் தெரியும், என் மரணத்துக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்று. ஆனால், துணிந்து அவர் பெயரைச் சொல்ல முடியாது உன்னால். என் வாழ்க்கையில் மட்டுமல்ல, உன்னைப் பொறுத்து இதுதான் உனக்கும். உன் காலத்தில்தான் என் மரணம் நடந்தது என்பதை எந்த நேரத்திலும் உன்னால் மறக்க முடியாது!*

*என் மறைவு, சுதந்திரத்தை வீழ்த்தாது. இதற்காகப் போராடுபவர்கள் தொடர்ந்து பணியாற்ற ஊக்கமாக அமையும். நமது தாய்நாட்டின் மனித சுதந்திரத்துக்கு ஒரு தொடக்கமாக அமையும். தேசப்பற்று என்ற பெயரால் பலர் தங்களது உயிரைத் துறக்கும் உண்மையை தெரிந்துகொள்ள இது உதவும். மனிதநேயம் வளம் பெறும்.”*

என்பது அந்த ஆசிரியர் தலையங்கத்தின் ஒரு பகுதி.

இதேவேளை, மிக் இராணுவ விமானக் கொள்வனவின் போது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் நாட்டுக்கு உண்மைகளை வெளிக் கொணர்ந்த காரணத்தால் லசந்த படுகொலை செய்யப்பட்டார் என்று முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் ‘கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்’ என்ற அமைப்பு இலங்கையில் 1992 ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 39 இற்கும் அதிகம் என்பதே உண்மையாகும். வடக்குக் கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39 இற்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத்தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப் படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(மன்னார் நிருபர்)

மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த சறுபுல் அனாம் முஹம்மது அமியாஸ் அகில இலங்கை சமாதான நீதிவானாக மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி கே.எல்.எம்.சாஜித் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஏ.எஸ்.எம் அமியாஸ், மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் என்பதுடன் இலங்கை ரயில்வே திணைக்களத்தின் கிளிநொச்சி ரயில்வே நிலைய அதிபராக செயற்பட்டு வருகின்றார்.



# ‘உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி’ வதந்தி பரப்பப்படுகின்றது என்கிறார் ஸ்டாலின்

“தி.மு.க. இளைஞரணி மாநாட்டின் மாநில உரிமை முழக்கம் எனும் நோக்கத்தைத் திசை திருப்ப நினைக்கும் எந்த முயற்சிகளுக்கும் தி.மு.கவினர் யாரும் இடம் கொடுத்திட வேண்டாம். மாநில உரிமைகளைக் காத்து கூட்டாட்சி இந்தியாவை உருவாக்கும் நோக்கத்தைச் செயல்படுத்தவே சேலம் இளைஞர் அணி மாநாட்டின் நோக்கமாகும். அந்த நோக்கத்தின் எதிரிகள்தான் உள்நோக்கம் கொண்ட வதந்திகளை பரப்புகிறார்கள்”

– இவ்வாறு உதயநிதிக்கு துணை முதல்வர் பதவி குறித்த சர்ச்சைக்கு முதல்வர் ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார்.



தி.மு.க. தொண்டர்களுக்கு பொங்கல் வாழ்த்து மடல் வெளியிட்டுள்ளார் முதல்வர் ஸ்டாலின். அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

”வதந்திகளையே செய்திகளாகப் பரப்பி வாழ்க்கைப் பிழைப்பு நடத்தி வயிறு வளர்க்கக்கூடிய பிறவிகள், என் உடல்நிலை குறித்து பொய்த்

தகவல்களைப் பரப்பிப் பார்த்தனர். அயலகத் தமிழர் நாள் விழாவில் உற்சாகத்துடன் பங்கேற்ற நான், தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும்போது எனக்கென்ன குறைச்சல் என்று கேட்டேன். நான் நலமாகவும் உற்சாகமாகவும் இருக்கிறேன். உழைக்கிறேன்.

ஒரு பொய் உடைந்து நொறுங்கியதால், அடுத்து ஒரு பரபரப்புக்காக, துணை முதல்வர் பொறுப்பு வழங்கப்படவிருக்கிறது என்ற வதந்தியைப் பரப்பத் தொடங்கினர். ஆனால், அதற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி, “எல்லா அமைச்சர்களும் முதல்வருக்குத் துணையாகத்தான் இருக்கிறோம்” என்று பதிலடி கொடுத்து, வதந்தி பரப்பியோரின் வாயை அடைத்துவிட்டார்.

தி.மு.க. இளைஞரணி மாநாட்டின் மாநில உரிமை முழக்கம் எனும் நோக்கத்தைத் திசை திருப்ப நினைக்கும் எந்த முயற்சிகளுக்கும் திமுகவினர் யாரும் இடம் கொடுத்திட வேண்டாம். மாநில உரிமைகளைக் காத்து கூட்டாட்சி இந்தியாவை உருவாக்கும் நோக்கத்தைச் செயல்படுத்தவே சேலம் இளைஞர் அணி மாநாட்டின் நோக்கமாகும். அந்த நோக்கத்தின் எதிரிகள்தான் இது போன்ற உள்நோக்கம் கொண்ட வதந்திகளை பரப்புகிறார்கள்.

தி.மு.க. தலைவர் என்கிற பொறுப்பு உங்களில் ஒருவனாகிய எனக்கு பொதுக்குழுவின் ஒட்டுமொத்த ஆதரவுடன் வழங்கப்பட்டிருக்கிற பொறுப்பு. முதல்வர் என்கிற பொறுப்பு தி.மு.கவினரின் அயராத உழைப்பிலும் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவாலும் கிடைத்தது ஆகும்.

நம்பிக்கை வைத்து பொறுப்பினை வழங்கிய உங்களின் நலனுக்காக, என் சக்திக்கு மீறி உழைக் கின்ற வலிமை என்னிடம் உள்ளது”– என்று குறிப்பிட்டுள்ளார்.

# அயோத்தியில் தனக்கு கோயில் கட்டுவதற்கு கடவுள் ராமர் மோடியை தேர்ந்தெடுத்தார்

## - பா.ஜ.க மூத்த தலைவர் கூறுகிறார்

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயிலில் 22 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ராமர் கோயில் கட்டுவதற்காக நாடு முழுவதும் ரத யாத்திரையை நடத்திய பா.ஜ.க. மூத்த தலைவர் எல்.கே.அத்வானி ராமர் கோயில்: தெய்வீக கனவை நிறைவேற்றுதல் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்த கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 1990 செப்டம்பர், 25 ஆம் திகதி குஜராத்தின் சோம்நாத் பகுதியில் இருந்து உத்தரபிரதேசத்தில் உள்ள அயோத்திக்கு ராம ரத யாத்திரை மேற்கொண்டோம். அதில் பிரதமர் மோடியும் பங்கேற்றார். அப்போது அவர் பிரபலமானவர் அல்ல.

ஆனால், அப்போதே அயோத்தியில் தனக்கு பிரம்மாண்ட கோயில் கட்ட பிரதமர் மோடியை, பகவான் ராமர் தேர்வு செய்துள்ளார். அதுதான் இப்போது செயல் வடிவம் கண்டுள்ளது.



அந்த யாத்திரையின்போது அரங்கேறிய சம்பவங்கள் எனக்குள் மாற்றத்தை தந்தன. எங்களது ரதம் செல்லும் இடமெல்லாம் யாரென தெரியாத கிராம மக்கள் எங்களுக்கு அதீத வரவேற்பு கொடுத்தனர். அது பகவான் ராமருக்கு கோயில் வேண்டுமென மக்கள் விரும்பியதன் வெளிப்பாடு. எதிர்வரும் 22 ஆம் திகதி ராமர் கோயிலில் கௌரவம் மட்டுமல்லாது மக்களின் நம்பிக்கையும் மீட்டெடுக்கப்பட உள்ளது.

நாடு முழுவதும் உள்ள காற்று மண்டலத்தில் ராம மயம் ஒலிக்கிறது. ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.கவின் பெருமைக்குரிய உறுப்பினராக மட்டுமின்றி, இந்தியாவின் பெருமைக்குரிய குடிமகனாகவும் இந்தக் கனவு நிறைவேறும் தருணம் எனக்கு நிச்சயம் பெருமையளிக்கிறது. எது வாழ்நாளில் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வைக் காண நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன். ராமர் கோயில் உருவாக காரணமான பிரதமர் மோடி தலைமையிலான அரசு, விஸ்வ ஹிந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க நிர்வாகிகள் மற்றும் யாத்திரையில் ஈடுபட்ட கரசேவகர்கள் உள்ளிட்ட எண்ணற்ற மக்களுக்கு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல் தொடரும்

## - அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எச்சரிக்கை



செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நிறுத்தாவிட்டால், அவர்களுக்கு எதிராக தொடர்ச்சியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

செங்கடலில் நிறுத்தப்பட்டுள்ள அமெரிக்க போர் கப்பல் நேற்று யேமனின் ரேடார் கட்டமைப்பை இலக்கு வைத்து ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டது.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட கூட்டு இராணுவத்தினர் தற்போது ஹவுதி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து 30 இற்கும் அதிக தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

யேமன் தற்போது பெயரளவில் இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டாலும் நாடு ஹவுதி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

நேற்று மீண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு ஒரு சில மணி நேரங்களின் பின்னர் யேமனிலுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் அந்த நாட்டின் தலைநகரான சனாவில் கூடி அமெரிக்கா, பிரித்தானியாவிற்கு எதிராக போராட்டத்தை ஆரம்பித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு அமெரிக்க மற்றும் பிரித்தானிய கூட்டு இராணுவம் யேமனின் தலைநகர் சனா உள்ளிட்ட ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகள் மீது டிரோன், ஏவுகணை தாக்குதல் மேற்கொண்ட நிலையில், செங்கடலுக்கு அருகே புதிய யுத்த பதற்றம் உருவானது. எனினும், யேமன் மீது மேற்கொள் எப்பட்ட தாக்குதலை அமெரிக்கா நியாயப்படுத்தியுள்ளது.

செங்கடலில் பயணிக்கும் வர்த்தகக் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் தாக்குதல்களைத் தடுத்து, அதனைக் குறைக்கும் நோக்கில் யேமன் மீது தாக்குதல் மேற்கொள்வதாக ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்க தூதுவர் லிண்டா தோமஸ் – கிரீன்பீல்ட் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் தெரிவித்தார்.

இதனிடையே, ஹவுதி கிளர்ச்சியாளர்களை தாக்குவதற்கு முன்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அந்நாட்டு காங்கிரஸின் அனுமதியை கோரவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், ஜோ பைடன் மீது காங்கிரஸ் உறுப்பினர்கள் மத்தியில் எதிர்ப்பு வலுப்பெற்றுள்ளது.

சர்வதேச மோதல்களின் போது மேற்கொள்ளப்படும் இராணுவத் தலையீட்டிற்கு காங்கிரஸின் அனுமதி அவசியம் என கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் எடுத்த தீர்மானம் அந்த நாட்டு அரசாங்கத்துடன் உரிய கலந்துரையாடலின்றி எடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக், எதிர்வரும் திங்கள்கிழமை நாடாளுமன்றத்தில் இதற்கான காரணத்தை முன்வைப்பதாக தெரிவித்துள்ளார்.

# கொலம்பியாவில் மண்சரிவு: 33 பேர் பலி, பலர் மாயம்

கொலம்பியாவில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 33 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்த நாட்டின் தேசிய பேரிடர் மேலாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குயிபோ, மெடெலின் நகரங்களுக்கு இடையிலான மலைப் பகுதியில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவில் சிக்கி புதையுண்டு 33 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் மேலும் சிலர் காணாமல் போயுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் 17 பேரின் உடல்கள் தடயவியல் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டு உள்ளன என அதிகாரிகள் கூறியுள்ளனர்.



இந்த நிலையில், மீட்புப்பணிகள் தொடர்ந்தும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன என அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இருப்பினும், மழையின் காரணமாக மீட்புப் பணிகளில் இடர்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டிருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.